அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் : 10/2015 (1)

எனது இலக்கம் :CS/SLAS/AMEN/MINUT (III தொகுதி)

அரசாங்க நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு,

சுதந்திர சதுக்கம்,

கொழும்பு 07.

2016 ஜனவரி மாதம் 07 ஆம் திகதி.

சகல அமைச்சுக்களினதும் செயலாளர்கள்,

மாகாண சபை பிரதம செயலாளர்கள்,

திணைக்கள தலைவர்கள்,

மாவட்ட செயலாளர்கள்,

2012.07.01 - 2013.12.23 ஆகிய கால இடைவெளியினுள் இலங்கை நிர்வாக சேவையினுள் ஆட்சேர்க்கப்பட்ட உத்தியோகத்தர்களின் வினைத்திறன் தடைதாண்டற் பரீட்சைக்கு தோற்றுதல் தொடர்பாக

இலங்கை நிர்வாக சேவையின் பிரமாணக் குறிப்பினை அமுல்நடாத்தும் வகையில் 2015.04.23 ஆம் திகதி அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இலக்கம்: 10/2015 இன் **03** பந்தியின் தொடரிலக்கம்: III. இன் கீழ் பின்வரும் பிரிவு உள்ளடக்கப்பட்டுள்ளது.

III. இலங்கை நிர்வாக சேவையின் 2005 சேவைப் பிரமாணக் குறிப்பின் கீழ் 2012.07.01 ஆம் திகதி முதல் 2013.12.23 ஆம் திகதி வரை ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட இலங்கை நிர்வாக சேவையின் உத்தியோகத்தர்களுக்கான குறித்த சேவைப்பிரமாணத்தின் படி முதலாம் வினைத்திறன் தடைதாண்டற் பரீட்சையில் சமூகவியல் அல்லது பொருளியல் தொடர்பாக வழங்கப்படும் விடுவித்தல் உரித்தாகும்.

இச்சுற்றறிக்கை அரச சேவை ஆணைக்குழுவின் உடன்பாட்டின் பிரகாரம் வெளியிடப்படுகின்றது.

ஜே. தடல்லகே

செயலாளர்,

அரசாங்க நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு